
# 26 செப்டம்பர் 2023- தினசரி நடப்பு நிகழ்வுகள்

| | |
|---|---|
| **பழவேற்காடு சுற்றுசூழல் பாதுகாப்பு மண்டலத்தில் 3 சிவப்பு ரக தொழிலகங்கள் அமைக்க தமிழக வனவிலங்கு வாரியம் முடிவு.**   | **செய்தி:**<br>• பழவேற்காடு சுற்றுசூழல் பாதுகாப்பு மண்டலத்திற்குள்(Eco Sensitive Zone- ESZ) மூன்று சிவப்பு ரக எஃகு உருகும் தொழிலகங்களை விரிவுபடுத்த தமிழக மாநில வனவிலங்கு வாரியம் பரிந்துரைத்துள்ளது.<br>• பழவேற்காடு சுற்றுசூழல் பாதுகாப்பு மண்டலம் பலவீனமான சுற்றுச்சூழல் அமைப்பை கொண்டுள்ளது. இதில் மேலும் அப்பகுதியில் தொழில்மயமாக்குவது மிக மோசமான நிலைக்கு தள்ளப்படும் என சுற்று சூழல் ஆர்வலர்கள் கவலையுடன் தெரிவித்தனர் .<br><br>**சுற்றுசூழல் பாதுகாப்பு மண்டலங்கள் என்றால் என்ன?**<br>• தேசிய பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்களின் எல்லையில் இருந்து 10 கிமீ தொலைவில் உள்ள நிலப்பரப்புகள் சுற்றுச்சூழல் பலவீனமான மண்டலம் அல்லது சுற்றுசூழல் பாதுகாப்பு மண்டலம் என அறிவிக்கப்படுகிறது.<br>• மத்திய சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தேசிய வனவிலங்கு செயல் திட்டத்தின் படி (2002-2016) மேலே உள்ள வரையறை உள்ளது.<br><br>**உனக்கு தெரியுமா?**<br>• 10 கிலோமீட்டர் வரை என்ற விதி ஒரு பொதுவான கொள்கையாக |

| | |
|---|---|
| | செயல்படுத்தப்பட்டாலும் அதன் பயன்பாட்டின் அளவு குறித்து வேறுபடும்<br><br>• 10 கிலோ மீட்டர் வரை உள்ள பகுதிகள் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த "பாதுகாப்பு வழித்தடங்களை" அமைந்திருந்தால் அவை மத்திய அரசாங்கத்தால் சுற்றுசூழல் பாதுகாப்பு மண்டலங்களாக அறிவிக்கப்படலாம். |
| **பழவேற்காடு பறவைகள் சரணாலயம்** | **முக்கிய குறிப்புகள்:**<br>• தமிழகத்தின் திருவள்ளூர் மாவட்டத்தில் **பழவேற்காடு** பறவைகள் சரணாலயம் உள்ளது.<br><br>• முழுமையான பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இது **சுற்றுசூழல் பாதுகாப்பு மண்டலமாக** அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>• **ஒடிசாவில் உள்ள சில்கா ஏரிக்குப் பிறகு இந்தியாவில் இரண்டாவது பெரிய உவர்ப்பு நீர் சுற்றுச்சூழல் அமைப்பாக பழவேற்காடு ஏரி உள்ளது.**<br><br>• இந்த சரணாலயம் அதிக **பூநாரை பறவைகளுக்கு** பெயர் பெற்றது.<br><br>**உங்களுக்கு தெரியுமா ?**<br>• பழவேற்காடு ஏரி இன்னும் 100 ஆண்டுகளில் மண்ணால் புதையுண்டு போகலாம் .<br><br>• இந்தியாவின் கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள பழவேற்காடு ஏரி **ஆந்திராவில்** (84%) **மற்றும் தமிழ்நாடு** முழுவதும் பரவியுள்ளது. |

| | |
|---|---|
| **தமிழ்நாட்டில் அதிக பெண்கள் ஓதுவார்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் .** | **செய்தி**:<br>• தமிழகத்தின் பல்வேறு கோவில்களில் கடந்த 28 மாதங்களில் 10 பெண் ஓதுவார்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.<br><br>**முக்கிய தகவல்கள்**:<br>• **ஓதுவார்** என்பது தமிழ் மொழியில் ஓதல் என்ற சொல்லில் இருந்து உருவானது. உண்மையில் ஓதுவார் என்ற சொல் ஓதுபவரைக் குறிக்கும்.<br>• இருப்பினும் தமிழ் சைவ மரபில் இந்த வார்த்தை பொதுவாக சைவக் கோயில்களில் **பக்தி பாடகர்களைக்** குறிக்கும் அவர்கள் பதிகங்கள் மூலம் தங்கள் புகழைப் பாடி தெய்வங்களுக்கு சேவை செய்கிறார்கள்.<br><br>**உங்களுக்கு தெரியுமா ?**<br>• காரைக்கால் அம்மையார், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் மற்றும் சுந்தரமூர்த்தி நாயனார் போன்ற நாயன்மார்கள் இயற்றிய பக்திப் பாடல்களை ஓதுவார்கள் கோவில்களில் பாடுவார்கள்.<br>.<br>• இந்த மூன்று நாயன்மார்களின்(திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் மற்றும் சுந்தரமூர்த்தி நாயனார்) படைப்புகளை ஒன்றாக இணைத்து **தேவாரம்** என்று அழைக்கப்படுகிறது.<br>• அவர்கள் 6 ஆம் மற்றும் 9 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் சிவாலயங்களில் பாடியதோடு பாடல்களை இயற்றி இசையும் அமைத்தனர். |

| | |
|---|---|
| **நீலகிரி மாவட்டத்தில் புலிகள் உயிரிழப்பு .** | **செய்தி:**<br>• தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் அதிகாரிகள் நீலகிரிக்கு சென்று புலிகள் இறப்பு குறித்து விசாரணை நடத்தினர்.<br>• நீலகிரி வனப்பகுதியிலும் முதுமலை புலிகள் காப்பகத்திலும் 10 புலிகள் (ஆறு குட்டிகள் மற்றும் நான்கு புலிகள்) உயிரிழந்தன.<br>• தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் தகவல்களின்படி, இந்த ஆண்டு இதுவரை 145 புலிகள் இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>• 145 புலி உயிரிழப்புகளில், முதுமலை புலிகள் காப்பகத்தில் 11 உயிரிழப்புகளும், சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் இரண்டு உயிரிழப்புகளும், தமிழகத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தில் ஒரு உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன |
| **தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம்** | **தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் பற்றிய முக்கிய தகவல்கள்**<br>• தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) என்பது சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு **சட்டரீதியான அமைப்பாகும்.**<br>• புலிகள் தொடர்பான செயற்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் **2005** ஆம் ஆண்டில் இந்த அமைப்பு அமைக்கப்பட்டது.<br>• வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டம் **1972ன்** கீழ் 2006ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி புலிகளின் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் இந்த |

| | |
|---|---|
| | அமைப்பு அமைக்கப்பட்டது |
| **இந்தியாவில் விற்கப்படும் மின் வாகனங்களில் 40 சதவீதம் தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகின்றன** | **முக்கிய தகவல்கள்:**<br>• சமீபத்திய தரவுகளின்படி, இந்தியாவில் இந்த ஆண்டு (ஜனவரி முதல் செப்டம்பர் வரை) விற்பனையான மின்சார வாகனங்களில் 40 சதவீதம் தமிழ்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>**உங்களுக்கு தெரியுமா ?**<br>• 6 தமிழக நகரங்கள் மின்சார வாகன மையமாக மாற அடையாளம் காணப்பட்டுள்ளன.<br>• சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி ஆகியவை மின்சார வாகன மையங்களாக உருவாக்கப்படுகின்றன.<br>• தமிழ்நாட்டில் மின்சார வாகன உற்பத்தி துறைக்கு உறுதுணையாக இருப்பவை திறமையான மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் , அருமையான விநியோக கட்டமைப்பு மற்றும் நன்கு பரந்த கூட்டமைவு பெற்று இருப்பதால் இத்துறை அதிக உற்பத்தி செய்ய முடிகிறது . |

***பதிப்புரிமை © Adda247***

*அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியையும் Adda247 இன் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கவோ, மீட்டெடுக்கும் அமைப்பில் சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு செய்தல் அல்லது வேறுவிதமாக அனுப்பக்கூடாது.*